- ஒரு கலந்துரையாடலுக்கு முன் சிலவேளை சிறிய பயிற்சிச்சுற்று வேண்டப்படலாம். எதற்கெனின்:

  1. மொழி பற்றிய வினாக்களைத் தெளிவாக்குதற்கு (எ.கா. முதல்மொழியில் சொற்கூறுகள்).

  2. மிகவும் பயனுள்ளதான, ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்ட வாக்கியக் கட்டுத்தொகுதிகள் அல்லது மொழி வழிகள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கு ("என் கருத்தின்படி…", "மாறாக நான் காண்பது…")

  3. இன்றியமையாத உரையாடல் விதிகளை நினைவூட்டுதற்காக, எ.கா. "நான் மிகக் கண்காணிப்புடன் கேட்கிறேன்", "ஒருவரின் கருத்துக்காக எவரும் நகைப்புக்கிடமாகார்", "நான் எவரையும் குறுக்கீடு செய்யமாட்டேன்", முதலியன. (பார்க்கவும் #9).

- வினா பற்றிய கலந்துரையாடல் முதலில் இணையர்களாக அல்லது பெரிய குழுவினை உள்ளடக்கியதாக (குழு நிலையில் அல்லது முழு வகுப்பும்) இடம்பெறும்.

# 25 ஆக்கத் திறனுடன் உரைத்தல்


## இலக்கு

*ஆக்கத்திறனுடன் உரைத்தலில் மொழி, முகபாவம் மற்றும் அபிநயங்கள் என்பன இன்றியமையாதவை. இங்கு மாணவர்கள் தங்களது முதல் மொழியை அன்றாட தேவைகளைத் தாண்டி ஆற்றல் மிக்க வெளிப்பாட்டு முறையைக் கையாளப் பயில்கிறார்கள். ஆகையால் ஆக்கத்திறனுடன் உரைத்தல், எளிமையான உரைத்தலுக்கும், நாடக உரையாடல் முறைகளுக்கும் இடையிலான நடுநிலையைப் பிரதிபலிக்கிறது. (26 – 28 பார்க்கவும்)*

தரம் 2 - 9 | 20 - 40 மணித்துளிகள்

**கருவிகள்:**
மாணவர்களுக்கான எழுத்துருக்கள் தெரிவு (தேவதைக் கதைகள், நீதிக்கதைகள், கதைகள்…)

**நடைமுறை:**



- ஓர் அறிமுகமாக, ஆசிரியர் ஒரு கதை சொல்கிறார், எ.கா. ஒரு தேவதைக் கதை, புராண அல்லது மாணவர்களின் பாரம்பரிய பண்பாட்டு இலக்கியத்திலிருந்து ஒரு கதை (மிக நீண்டது அல்ல). ஆசிரியர் #22இல் மதியுரை செய்யப்பட்ட உயிர்ப்புள்ள எடுத்துரைப்புக்கான முன்னூட்டற் குறிப்புகளை உற்றுநோக்கி எழுத்துருவினை தெளிவாகவும் உயிர்ப்பாகவும் உள்ள எடுத்துரைப்பாக ஆக்குதற்கு முயற்சிப்பார்.

- மாணவர்கள் பின்னர் தனியாகவோ சிறு குழுக்களாகவோ அதே முறையில் ஒரு கதையை எடுத்துரைக்க பயிற்சிசெய்ய அறிவுறுத்தப்படுகின்றனர். ஆசிரியர் பொருத்தமான எழுத்துருக்களைப் பகிர்கிறார் (தாழ்தர மாணவர்களுக்குச் சிறியனவும் மிக உயர்தர மாணவர்களுக்கு நீண்டவையும்).

- உயிர்ப்புள்ள தெளிவான உரைக்கான மிக இன்றியமையாத காரணிகளைத் திரட்டி இன்னொரு தடவை மீளாய்வு செய்யப்படும் (பார்க்கவும் #22 இல் முன்னூட்டற் குறிப்புகள்); மாணவர்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- மாணவர்கள் தங்கள் உரைகளை எடுத்துரைக்க பயிற்சிசெய்கின்றனர் (நடைமுறைகளுக்குப் பார்க்கவும் #22).

- அடுத்து, ஒவ்வொரு உரைகளும் வகுப்பு முழுவதற்கும் எடுத்துரைக்கப்படும்.

- #22 இல் விளக்கப்பட்டபடி, பயிற்சி விமர்சனக் கலந்துரையாடலோடு நிறைவடைகிறது.

**மாற்றுவழி:**

- ஆசிரியர் ஒரு கலந்துரையாடலை அறிமுறைப்படுத்தும் ஒரு வழிமுறையாக ஒரு படத்தை அல்லது ஒரு கலைப் பொருளைக் காட்டுகிறார். முழு வகுப்பும் ஒரு கதையை உருவாக்கத் தொடங்குகிறது. இதன்படி ஒரு மாணவர் தொடங்க மற்றவர் கதையை தொடர்கிறார், இப்படித் தொடர்ந்து எல்லோரும் தத்தம் பகுதிகளுக்குப்

பங்களிப்பைச் செய்யக் கதை முடிவடைகிறது. குரல் கட்டுப்பாடு, சைகைகள், முகபாவம் ஆகியவற்றின் அடிப்படையில் உரைகள் உணர்வுப் புலப்பாட்டுடன் வழங்கப்படவேண்டும். இந்த மாற்றுவழி சிறு குழுக்களுக்கே ஏற்புடையது.

- ஆசிரியர் ஒரு தலைப்புத் தொடர்பாக சொற்களுள்ள அட்டைகளை பகிர்கிறார். அவர் அட்டையிலுள்ள ஒரு சொல்லைக் கொண்ட வாக்கியத்துடன் ஒரு கதையைத் தொடங்குகிறார். ஒரு மாணவர் தன்னுடைய அட்டையிலுள்ள சொல்லைக்கொண்ட வாக்கியத்துடன் கதையைத் தொடர்கிறார், இவ்வாறு கதை தொடர்கிறது.
- மேலும் கூடிய ஊக்குவிப்புக்கு உரை எழுத்துருக்கள் பதிவுசெய்யப்படலாம், அவை இறுவட்டுகளாக அல்லது MP3 கோப்புகளாக ஆக்கப்படலாம்.

---

# 26 அரை - உண்மை நாடகம், சமூக வகிபாக நாடகம்

**இலக்கு**

*#8 இல் விவரிக்கப்பட்ட எளிமையான வகிபாக நாடகத்துக்கு மாறாக, பின்வரும் வகை கூடிய விரிவான வழிகாட்டுதல்களுடனான மிக அதிகமாக வடிவமைக்கப்பட்ட உருவமைப்புகளை உள்ளடக்கியது. இதன் நோக்கம் சொல்லாடல் திறன், வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்ட மொழிப் பயன்பாடு, மொழியிலா வழிமுறைகள் (சைகைகள், முகபாவங்கள்) மற்றும் தன்னை நம்பத்தகு முறையில் முன்னிலைப்படுத்தும் திறன் என்பவற்றை வலுவடையச் செய்தல் ஆகும். தலைப்பைப் பொறுத்து இத்தகைய காட்சிகள் பேச்சு மதிநுட்பங்களையும் கருப்பொருள் தொடர்பான சொற்களஞ்சியத்தையும் விரிவடையச் செய்தலுக்குப் பங்களிக்கின்றன.*

தரம் 3 - 9

30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**

சில தூண்டிகள்

**நடைமுறை:**

- ஆசிரியர் முரண்பாடு அல்லது பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழலை விவரிப்பார். எடுத்துக்காட்டுகள்:

  அ) பள்ளியில், இரண்டு மாணவர்கள் சண்டையிட்டனர், ஏனெனில் இருவருள் ஒருவர் தவறுதலாக மற்ற மாணவரின் பென்சிலை உடைத்துவிட்டார்.

  ஆ) தங்கள் ஓய்வு வேளையில்: இரண்டு உள்ளூர் பிள்ளைகள் அல்லது இளையவர்கள் இரு புலம்பெயர்ந்தோரை நகையாடுகின்றனர்.

  இ) தன் தாய் நாட்டில் விடுமுறையில்: அங்கு விடுமுறையில் உள்ள ஓர் இளம் பெண்ணை அங்கு வாழும் இரு இளையவர்கள் நகையாடினர்.

  ஈ) வீட்டில் இரவுணவு வேளையில், ஒரு பிள்ளை தன் பெற்றோர்கள் முற்றாக விரும்பாத ஒன்றைக் கேட்கின்றது (எ.கா. ஒரு நாயைப் பெறுவது, அல்லது டிஸ்கோவுக்குப் போதல்).

- இந்த நிலைமையை மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பது பற்றி குழு அல்லது வகுப்புக் கலந்துரையாடல்கள். கேட்கக்கூடிய கேள்விகளும் தூண்டிகளும்: இந்த நிலையில உங்கள் உணர்வு எவ்வாறு இருக்கும்? எத்தகைய நடந்துகொள்வீர்கள்? எத்தகைய சாத்தியமான தீர்வுகள் உள்ளன?
- தேவை ஏற்படும்போது, மொழி வழிமுறைகள் பற்றி ஒரு சுற்றுக் கலந்துரையாடல்களை உள்ளடக்கவும். பார்க்கவும் "குறிப்புகள்" மறுபக்கத்தில்.
- தனிப்பட்ட எடுத்துரைப்புகளில் எத்தகைய வழிகாட்டுவிதியினை பின்பற்றவேண்டும் என்பது பற்றி ஒரு சிறிய கலந்துரையாடலில் ஈடுபடுக (எ.கா. நேரிடக்கூடிய தீர்வு, மொழியின் தரம், விளங்கிக்கொள்ளல், முதலியன). வழிகாட்டுவிதி தெளிவானதாகவும் எல்லா மாணவர்களும் அறிந்ததாகவும் அமையவேண்டும். இந்நிலைக்குப் பொருத்தமான வழிகாட்டுவிதி அட்டவணைகளுடன் செயற்பட, அறிமுகத்தில் இயல் 3 ஐ பார்க்கவும.
- மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகிறார்கள் (அல்லது தாம் தம்மிடையே குழுக்களை அமைக்கின்றனர்). அவர்கள் தம் எடுத்துரைப்பை ஏற்பாடு செய்ய 10-15 மணித்துளிகள் இருக்கின்றன. எடுத்துரைப்பு 5-8 மணித்துளிகளுக்கு மேலே எடுக்கக்கூடாது.

III